# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 14 வெள்ளி 30.07.2021 மலர் - 2, இதழ் - 115


## நாமும் பங்கு கொள்வோம்



விஜயபாரதம்

நமது விஜயபாரதம் மின்னிதழ் தினசரி தோராயமாக எத்தனை நபர்களை சென்றடைகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறோம். இது நமது இதழை மேலும் செம்மையாக்க உதவும் என்பதால் நீங்கள் இதனை தினமும் எத்தனை பேர்களுக்கு அனுப்பி (Forward) வருகிறீர்கள் என்பதை விஜயபாரதத்திற்கு +91 93613 99006 என்ற எண்ணில் குறுஞ்செய்தியாக (SMS) தெரிவித்தால் உதவிகரமாக இருக்கும். அதனை தாங்கள் அனுப்பும் தனி நபர்கள் எண்ணிக்கை, குழுக்களின் எண்ணிக்கை, அந்த குழுக்களில் சுமார் எத்தனை பேர் உள்ளனர் என்ற விவரம், மொத்தம் என்ற வகையில் ஓரிரு நாட்களில் அனுப்பினால் நலம்.

உதாரணமாக தனி நபர்கள் 50, குழுக்கள் 5 அதில் உள்ள நபர்களின் எண்ணிக்கை 500, மொத்தம் 550 என்ற வகையில் அனுப்பலாம்.

மேலும் விஜயபாரதம் மின்னிதழுக்காக தாங்கள் அனுப்ப விரும்பும் தங்கள் பகுதி செய்திகள், கருத்துகள், ஆலோசனைகளை webvijayabharatham@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பிவைக்கலாம்.

ஆசிரியர்

## பெயர் பலகையில் வில்லங்கம்



விஜயபாரதம்

நாகர்கோயிலில் உள்ள ஹிந்து அறநிலையத்துறையின் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களுக்கான கண்காணிப்பாளர் அலுவலகத்தின் பெயர் பலகையில் ஹிந்து அறநிலையத்துறை என்பதற்கு பதிலாக அறநிலையத்துறை என்று மட்டும் அச்சிடப்பட்டு இருந்தது. இது சமுக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி பெரும் சர்ச்சையானது. அப்பகுதி இந்து முன்னணியினர் இதனைக் கண்டித்து அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனையடுத்து உடனடியாக பெயர்பலகை ஹிந்து அறநிலையத்துறை திருக்கோயில் அலுவலகம் என புதிதாக மாற்றப்பட்டது.

# வெளிவரும் உண்மைகள்



விஜயபாரதம்

தி.மு.கவின் வெற்றி நாங்கள் போட்ட பிச்சை என்று கூறி ஒரு உண்மையை போட்டுடைத்தார் கிறிஸ்தவ பாதிரி ஜார்ஜ் பொன்னையா. இது பெரும் சர்ச்சையானது. அவரைத் தொடர்ந்து இஸ்லாமிய மதபோதகர் ஒருவர் இதேபோன்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். ஜமாத்தில் இமாம்கள் தி.மு.கவிற்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால்தான் கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்றது என்று பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசியுள்ளார்.

இஸ்லாமியர்கள் பொது மேடையில் பேசுவதை கவனிப்பார்கள் ஆனால் செயல்படுத்த மாட்டார்கள். வெள்ளிக்கிழமை பள்ளிவாசலில் ஜும்மா மேடையில் சொல்லப்பட்டால் அது கண்டிப்பாக செயல்படுத்தப்படும். பல மாநிலங்களில் ஜும்மாவில் இமாம்கள் பேசவில்லை. ஆனால் தமிழகத்தில் மட்டும் ஜும்மாவில் இமாம்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்று பேசினார்கள். இதனால் நாடு முழுவதும் நாடாளுமன்ற தேர்தலில் ஒரு தீர்ப்பு வந்த பொழுது தமிழகத்தில் மட்டும் வேறு தீர்ப்பு வந்தது என்று கூறியுள்ளார்.

வழிபாடு நடைபெறும் இடங்களில் மத கூட்டங்களில் அரசியல் பேசக்கூடாது. இன்னாருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என எவ்வகையிலும் யாரும் கட்டாயப்படுத்தக்கூடாது என விதிக்கப்படும் தேர்தல் ஆணைய சட்டங்களை ஹிந்துக்கள்தான் பின்பற்றுகின்றனர். மற்ற மதத்தினர் யாரும் பின்பற்றுவதில்லை. இது போன்ற ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயல்களை மாநில அரசுகளும், காவல்துறையும் கண்டுகொள்வதில்லை. உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்பதையே இந்த நிகழ்வுக்சள் எடுத்துக்காட்டுகின்றன.

மக்களும் நமக்கு நன்மை செய்பவர் யார், எந்த கட்சி நாட்டை முன்னேற்றுகிறது, யார் உண்மையான மதச்சார்பற்றவர், யார் மக்களுக்கும் நாட்டுக்கும் உண்மையாக தொண்டாற்றுபவர், யார் வாக்குறுதியை நிறைவேற்றுபவர், யார் ஏமாற்றுக்காரர், பிரிவினையை தூண்டிவிட்டு குளிர் காய்பவர்கள் யார், தேசத்தை ஒற்றுமைப்படுத்த பாடுபடுபவர் யார், மதத்தை வைத்து பிழைப்பு நடத்துபவர் யார்? என்பதை எல்லாம் ஆராயாமல், மதத்தலைவர்கள் சொல்வதை மட்டுமே கேட்டு கண்மூடித்தனமாக வாக்களிக்கின்றனர் என்பதும் தெரியவருகிறது.

இந்த நிலை மாற வேண்டும், மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் அப்போதுதான் நாட்டில் உண்மையான முழுமையான ஜனநாயகம் மலரும். தேசம் முன்னேறும், மக்கள் வாழ்க்கைத்தரம் உயரும்.

# மதுரை எய்ம்ஸ்




விஜயபாரதம்

மதுரை எய்ம்ஸ் மாணவர் சேர்க்கை தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன், தமிழக தலைமைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், 'மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான தற்காலிக இடத்தை தேர்வு செய்தால் நடப்பாண்டிலேயே மாணவர் சேர்க்கை நடைபெறும். செலவினம், அலுவலர் தேர்வு, உட்கட்டமைப்பு ஆகியவற்றை மத்திய சுகாதாரத்துறை ஏற்றுக்கொள்ளும். தற்காலிக இடத்தை தமிழக அரசு தேர்வு செய்தால் மதுரை எய்ம்ஸில் 50 முதல் 100 மாணவர் சேர்க்கை நடைபெறும்' என கூறப்பட்டுள்ளது.

# மோடியை பின்தொடர்பவர்கள் அதிகம்



விஜயபாரதம்

பிரதமர் நரேந்திர மோடி சமூக டுவிட்டரில் அதிகமான நபர்களால் பின்தொடரப்படும் அரசியல்வாதிகளில் ஒருவராகவும் பாரத அளவில் முதலாவதாகவும் உள்ளார். அவரை 70 மில்லியனுக்கும் அதிகமானோர் தற்போது பின்தொடர்கின்றனர். அமெரிக்க அதிபர் ஜோ பிடனுக்கு டுவிட்டரில் 30.9 மில்லியன் பின்தொடர்பவர்கள் உள்ளனர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு 7.1 மில்லியன், அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவுக்கு 130 மில்லியன், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 26.3 மில்லியன், ராகுல் காந்திக்கு 19.4 மில்லியன் பின்தொடர்பவர்கள் உள்ளனர். என்றும் நவீன தொழில்நுட்ப ஆர்வலரான மோடி, நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க சமூக வலைத்தள தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகிறார். முன்னதாக, குஜராத்தின் முதல்வராக இருந்தபோது அரசியல் பிரச்சாரத்தில் 3 டி ஹாலோகிராம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் காட்டி இதில் முன்னோடியாக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு தனி ஹெல்ப்லைன்




விஜயபாரதம்

வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவ, தேசிய மகளிர் ஆணையம் சார்பில் டிஜிட்டல் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவும் வகையில், தேசிய மகளிர் ஆணையம் இந்த 24 மணி நேர உதவி மையத்தைத் துவக்கியுள்ளது. பாதிப்பிற்கு உள்ளாகும் பெண்கள், 78271 70170 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு காவல்துறை, மருத்துவமனை, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, உளவியல் சேவைகள் உள்ளிட்ட உதவிகளை பெறலாம்.

# கோயில் நில மீட்பில் சந்தேகம்



விஜயபாரதம்

ஸ்ரீ காஞ்சி சங்கர மடம் குறித்த வரலாற்று ஆய்வு நூல்களை காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வெளியிட பா.ஜ.க மூத்த தலைவர் இல கணேசன் பெற்றுக்கொண்டார். பின்பு செய்தியாளர்களை சந்தித்த அவர், 'ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபுவின் செயல்பாடுகள் வியப்பாக இருக்கிறது. அன்றாடம் ஒவ்வொரு ஆலயத்துக்கு போகிறார், ஆய்வு செய்கிறார். பலகோடி ரூபாய் நிலங்களை மீட்டுள்ளார் என செய்தி வருகிறது. அப்படி ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்பது என்பது ஒரு பட்டனை தட்டினால் ஏற்படக்கூடிய விஷயமாக இருக்குமானால் இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் இதை ஏன் செய்யவில்லை? என்ற கேள்வி வருகிறது. அதனால் நடப்பது குறித்து மகிழ்ச்சிதான். ஆனாலும் ஏதோ ஒரு சந்தேகம் உள்ளுக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்' என தெரிவித்தார்.

முன்னதாக வடபழனி கோயில் நிலத்தை மீட்டுள்ளோம் என பத்திரிகையாளர்களை அழைத்து பெருமை பேசிய தி.மு.கவை சேர்ந்த அமைச்சர் சேகர்பாபு, அதே வடபழனி கோயிலின் 1,600 சதுர அடி நிலத்தை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுக்க இசைந்தது ஏனோ. ஒருவேளை நிலங்களை மீட்பது மாற்று மதத்தினருக்கும் தங்களது கட்சியினருக்கும் தாரைவார்க்கத்தானோ? நீதிமன்ற உத்தரவுப்படிதான் நிலங்கள் மீட்கப்படுகின்றன ஆனால், தாங்களே ஏதோ புதிதாக சாதித்ததுபோல இவர்கள் காட்டிக்கொள்கின்றனர். கோயில் நிலங்களை அள்ளிக்கொடுக்க இவர்கள் யார்? என சமூக வலைத்தளவாசிகள் கடந்த சில நாட்களாகவே விமர்சித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடக அரசியல்வாதிகள்



விஜயபாரதம்

கன்னியாகுமரியில் பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை நாகர்கோயில் நாகராஜா கோயிலில் சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, 'அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணியில் எந்த குழப்பமும் இல்லை. உள்ளாட்சி தேர்தலுக்கு பா.ஜ.க தயாராக இருக்கிறது. பிரதமர் மோடி, திருக்குறளை பல இடங்களில் எடுத்துக்காட்டி பேசி வருகிறார். திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதில் எந்தத் தவறும் இல்லை. மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை பறிப்பதாக ஒரு நாடக அரசியலை தி.மு.க செய்து வருகிறது. தேசிய மீன் வள மசோதா விவகாரத்திலும் தி.மு.க நாடகத்தை நடத்துகிறது. அவர்கள் கடந்த தேர்தல் அறிக்கையில் மீனவர்களுக்காக அறிவித்த எதையும் நிறைவேற்றவில்லை. தொலைப்பேசி ஒட்டு கேட்கப்பட்டதாக எதிர்கட்சிகள் கூறுவது என்பது இல்லாத ஒரு விஷயத்தை இருப்பதாக கூறுவது. வேலையில்லாத காங்கிரஸ் கட்சியினர் கதை திரைக்கதை வசனம் என்பவற்றை எழுதி ஒரு படத்தை நாடாளுமன்றத்தில் போட்டார்கள். அது அரை மணி நேரத்திற்கு மேல் ஓடவில்லை. ராகுலுக்கும் வேறு வேலை இல்லை. மமதா பேனர்ஜி இந்த நாடகக்குழுவில் புதிதாக சேர்ந்துள்ளார்' என கூறினார்.


# சிறப்பாக செயல்படும் பாரதம்



விஜயபாரதம்

'கொரோனா பிரச்னையை பாரதம் மிகச்சிறப்பாக கையாண்டு வருகிறது. தடுப்பூசி நோய் பரவலை தடுக்கிறது. அதனை அனைவருக்கும் செலுத்த வேண்டியது அவசியம். மக்கள்தொகை அதிகம் என்பதால் இந்த பணியில் சவால் உள்ளதை உணரமுடிகிறது. வினியோகம் அதிகரிக்க வேண்டும் அப்போதுதான் தடுப்பூசி அனைவரையும் சென்றடையும். நோய்த் தொற்றின் முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் எனவே, எச்சரிக்கையுடனும் நம்பிக்கையுடனும் செயல்பட வேண்டிய நேரம் இது. தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் பலரிடம் இன்னமும் தயக்கம் உள்ளது. பள்ளி, கல்லூரிகளை திறக்கும்போது குழந்தைகளுக்கு வைரஸ் பாதிப்பு ஏற்பட இது காரணமாக அமைந்துவிடும். தடுப்பூசி மீதான தயக்கத்தை போக்க, சமூக சிந்தனையுள்ள விஞ்ஞானிகள், சமூக தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். வரும் காலங்களில் தடுப்பூசி செலுத்திக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என நம்புகிறேன்' என உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன் கூறினார்.

# வைப்புத்தொகை காப்பீடு உயர்வு



விஜயபாரதம்

மத்திய அரசு, வங்கிகளின் வைப்புத்தொகை காப்பீடு, கடன் உத்தரவாதக் கழக (டி.ஐ.சி.ஜி.சி) சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவந்துள்ளது. இந்த சட்டத் திருத்தத்தின்படி, வங்கி திவால் ஆனாலோ தடைக்கு உள்ளானாலோ வங்கி வைப்பு நிதி வாடிக்கையாளர்கள் 90 நாட்களுக்குள் ரூ. 5 லட்சம் வரை காப்பீடு பெறுவார்கள் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார். இதன்படி, ஒவ்வொரு வைப்பு நிதி கணக்குக்கும் ரூ. 5 லட்சம் காப்பீடு வழங்கப்படுகிறது. முன்னதாக இந்த காப்பீட்டுத் தொகை ரூ. 1 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், நாட்டின் 93.5 சதவீத வைப்பு நிதி கணக்குகள் மற்றும் 50.9 சதவீத வைப்பு நிதி மதிப்பு இதற்குள் அடங்கிவிடும். இந்த சட்டத்தின் கீழ் பாரதத்தில் உள்ள அனைத்து அரசு, தனியார், கூட்டுறவு மற்றும் வெளிநாட்டு வங்கி வைப்பு நிதிகளும் காப்பீடு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜார்கண்டில் நீதிபதி கொலை



விஜயபாரதம்

ஜார்க்கண்டில் உள்ள தன்பாத்தில் மாவட்ட அமர்வு நீதிபதி உத்தம் ஆனந்த் புதன்கிழமை (ஜூலை 28) அதிகாலை தனது நடைப்பயணத்திற்கு வெளியே வந்தபோது வாகனத்தில் அடிபட்டு இறந்தார். முன்னதாக, இது சாலை விபத்து என்று நம்பப்பட்டது. ஆனால் இந்த சம்பவத்தின் சி.சி.டி.வி காட்சிகளை ஆராய்ந்தபோது, ஆட்டோ ஒன்று அவரை மோதிச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இந்த சம்பவம் ஒரு கொலையாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வழக்கை காவல்துறை விசாரித்து வருகிறது. குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று எஸ்.டி.பி தனபாத் சஞ்சீவ் குமார் தெரிவித்தார். இந்த நிலையில், இது குறித்து சிறப்பு புலனாய்வு அமைப்பு விசாரிக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# நிலத்தடி நீர்மட்டம் உயர்வு



விஜயபாரதம்

தென்மேற்குப் பருவமழையால் தமிழகத்தில் 36 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக வேலூர் மாவட்டத்தில் 3.07 மீட்டர் உயர்ந்துள்ளது, மிகக்குறைவாக ஈரோடு மாவட்டத்தில் 0.09 மீட்டர் மட்டுமே நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மேலும், திருவள்ளூர், தர்மபுரி, கடலூர்,விழுப்புரம், கரூர், நாமக்கல், தேனி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய 10 மாவட்டங்களில் 1 மீட்டருக்கும் அதிகமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், சேலம், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், கள்ளக்குறிச்சி, தென்காசி, திருப்பத்தூர் ஆகிய 14 மாவட்டங்களில் 2 மீட்டருக்கு மேல் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ஈரோடு, கோவை, நீலகிரி, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் 0.09 முதல் 0.73 மீட்டர் வரை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது என நீர்வள ஆதாரத் துறை தெரிவித்துள்ளது.


# வாலாட்டும் டுவிட்டர்



விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின்படி, நமது நாட்டில் செயல்படும் சமூக வலைதளங்கள், மின்னணு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் குறைதீர் அதிகாரிகள், பாரதக் குடியுரிமை பெற்றவராகவும் அந்த நிறுவனத்தின் நிரந்தர பணியாளராகவும் இருக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், இதனை முதலில் ஏற்க மறுத்தது டுவிட்டர் நிறுவனம். பின், தர்மேந்திர சதுர் என்பவரை குறைதீர் அதிகாரியாக நியமித்தது. ஆனால், அவர் உடனேயே பதவி விலகினார். அடுத்து ஜெர்மி கெசல் என்ற அமெரிக்கரை நியமித்தது. இதைஅரசு ஏற்கவில்லை. பின்னர் வினய் பிரகாஷ் என்பவரை ஒப்பந்த அடிப்படையில் நியமித்தது. இது குறித்த விசாரணையின்போது நீதிபதி, 'புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளை ஏற்பதில், டுவிட்டருக்கு விருப்பம் இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. அதனால்தான், விதிகளை செயல்படுத்துவதில் அலட்சியம் காட்டுகிறது. ஒப்பந்த அடிப்படையில் குறைதீர் அதிகாரியை நியமித்ததை ஏற்க முடியாது. இன்னும் ஒரு வாரத்தில் நிரந்தர குறைதீர் அதிகாரியை டுவிட்டர் நியமிக்க வேண்டும்' என கூறினார்.

# அயோத்தி ராமேஸ்வரம் விமான சேவை



விஜயபாரதம்

ராமேஸ்வரம் வந்த உத்தர பிரதேச போக்குவரத்துத் துறை அமைச்சர் நந்தகோபால் குப்தா, சுவாமி தரிசனத்துக்கு பின், 'உ.பி.,யில் முதல்வர் யோகி ஆதித்யநாத் முதல்வரானது முதல் ரவுடியிசம், கட்ட பஞ்சாயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. உ.பி., வளர்ச்சி பாதையில் செல்கிறது. இதனால் மக்களும் பொருளாதார ரீதியாக மேம்பட்டு உள்ளனர். அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் கட்டுமானம் முடிந்ததும், மத்திய அரசுடன் ஆலோசித்து, ராமாயணத்துடன் தொடர்புடைய அயோத்தி ராமேஸ்வரம் இடையே, விமான போக்குவரத்து துவக்கப்படும். அடுத்தாண்டு உ.பியில் நடக்கவுள்ள சட்டசபை தேர்தலில், பா.ஜ.க 300 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும்' என்று கூறினார்.

# என்ன நடக்கிறது கேரளாவில்

நாடு முழுவதும் கொரோனா இரண்டாவது அலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மத்திய மாநில அரசுகள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் கொரோனா படிப்படியாக குறைந்தது. எனினும் மகாராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட சில மாநிலங்களில் பாதிப்பு குறையாமல் இருந்தது. நாளடைவில் மற்ற மாநிலங்களில், கொரோனா தாக்கம் குறைந்தாலும், பக்ரீத் கால கட்டுப்பாட்டுத் தளர்வு, முறையற்ற நிர்வாகம், ஒருங்கிணைப்பின்மை உள்ளிட்ட காரணங்களால் கேரளாவில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் ஜூலை 31, ஆகஸ்ட் 1ல் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படுகிறது. இந்நிலையில், கேரளாவில் கொரோனா தொற்று அதிகரிப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக 6 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அனுப்பியுள்ளது. இக்குழு கேரளாவில், கொரோனா பாதிப்பை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள், பாதிப்பு அதிகரிக்க என்ன காரணம், மூன்றாவது அலையை தடுக்க என்ன செய்யப்பட்டுள்ளது, உருமாறிய கொரோனா வைரஸின் பாதிப்பு உள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்ய உள்ளது.




விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள்






# கீதா பிரசுரம் மூடப்படுகிறதா?



விஜயபாரதம்

உத்திரபிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டத்தில் 1923ம் ஆண்டில் ஹனுமான் பிரசாத் போத்தர் என்பவர் கீதா பதிப்பகத்தை நிறுவினார். இது பகவத்கீதை மட்டுமல்லாமல் பல்வேறு ஹிந்து மத நூல்களை வெளியிடுகிறது. மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கிறது. சமூக ஊடகங்களில் நஷ்டம் காரணமாக கீதா பிரஸ் மூடப்படவிருப்பதாக செய்திகள் கடந்த சில வருடங்களாக உலா வருகின்றன. இது குறித்து அதன் மேலாளரான லால்மணி திவாரி கூறுகையில், கீதா பிரசுரம் மக்கள் ஆதரவாலும் இறையருளாலும் நன்றாக நடக்கிறது. 2 லட்சம் சதுர அடியில் நவீன ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தி பதிப்பித்தல் நடக்கிறது. எங்களுக்கு யாராவது நன்கொடை அனுப்பினால், அவர்களுக்கு நாங்கள் நன்றியுடன் பாராட்டுக் கடிதத்தை அனுப்புவதுடன் அவர்களின் காசோலையையும் திருப்பி அனுப்புகிறோம். நன்கொடையை நாங்கள் வாங்குவதில்லை. எங்கள் புத்தகங்கள் மூலம் சமூகத்திற்கு சேவை செய்யவே நாங்கள் விரும்புகிறோம். மேலும், இதுபோல யாராவது உங்களுக்கு செய்தி அனுப்பினால் எச்சரிக்கையுடன் இருக்கவும். இதனை சாக்காகக் கொண்டு மோசடியில் சிலர் ஈடுபட வாய்ப்புள்ளது' என்றார்.

# தாய்மண் திரும்பும் பண்டிட்டுகள்



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிகளில் வசித்த அம்மாநில பூர்வகுடிகளான காஷ்மீர பண்டிட்டுகள் 1990ல் அம்மாநில அரசின் ஆதரவுடன் முஸ்லிம்கள் செய்த வன்முறை, கற்பழிப்பு, கொலைகள் காரணமாக தங்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேறினர். சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வந்தனர். பலர் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளுக்குக் குடி பெயர்ந்தனர். பா.ஜ.க தலைமையிலான மத்திய அரசு எடுத்துவரும் மீள்குடியேற்றத் திட்டங்கள், சட்டப்பிரிவு 370, 35ஏ நீக்கம் போன்றவற்றால் தற்போது 3,841 பண்டிட்டுகள் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிக்கு திரும்பியுள்ளனர்.

அவர்களுக்கு பிரதமர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் மேலும் 1,997 பேர் மீள்குடியமர்வு செய்யப்பட உள்ளனர். 30,000க்கும் மேற்பட்ட காஷ்மீர் பண்டிட்டுகள் 2021 ஜனவரியில் மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 2,000 அரசு வேலைகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்காக 2,600க்கும் மேற்பட்ட குடியிருப்புகளைக் கட்ட 5 மாவட்டங்களில் நிலங்களை அளிக்க ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது. வரும் 2022ம் ஆண்டிற்குள் பள்ளத்தாக்கில் இருந்து இடம்பெயர்ந்த அனைத்து காஷ்மீர் பண்டிட்டுகளையும் மீள்குடியமர்த்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

# டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி



விஜயபாரதம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1886ம் ஆண்டு பிறந்த முத்துலட்சுமி ரெட்டி திண்ணைப் பள்ளியில் படித்தார். அவருடைய தாயார் சந்திரம்மாள் நோயால் சிரமப்பட்டு இறந்தார். இதனை நேரில் பார்த்ததால், தான் எப்படியும் மருத்துவர் ஆக வேண்டும். நம்முடைய தாயை போன்று நோயால் அவதிப்படும் ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். சென்னை மருத்துவக்கல்லூரியில் சேர்ந்த இவர், படிப்பில் சிறந்து விளங்கினார். பல்வேறு சான்றிதழ்களையும், தங்க பதக்கங்களையும் பெற்றார்.

கர்னல் ஜிப்போர்டு என்ற அறுவை சிகிச்சைத்துறை பேராசிரியர், தன்னுடைய வகுப்பில் மாணவிகளை அமர அனுமதிப்பது இல்லை. ஆனால் முத்துலட்சுமி தங்கப்பதக்கம் பெற்ற பிறகு, மனம் மாறிய அவர், தனது வகுப்பில் பெண்கள் உட்காரலாம் என்று கூறினார். முத்துலட்சுமி, பாரதத்தின் முதல் பெண் மருத்துவராக பட்டம் பெற்றபோது, 'சென்னை மருத்துவக்கல்லூரி வரலாற்றில் இது பொன்னான நாள்' என்று எழுதினார் கர்னல் ஜிப்போர்டு.

பின்னர் எழும்பூர் மருத்துவமனையில் முதல் பெண் மருத்துவராக பணியில் சேர்ந்தார். லண்டனில் உள்ள செல்சியா மருத்துவமனையில் தாய்சேய் மருத்துவம் மற்றும் புற்றுநோய் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்தார்.

1926ல் பிரான்சிலும், 1933ல் அமெரிக்காவிலும் நடைபெற்ற சர்வதேச பெண்கள் மாநாடுகளில் பாரத பிரதிநிதியாக கலந்துகொண்டார். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயராக பணியாற்றி, அன்றைய சென்னை மாகாண சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி இவர்தான். 1925ல் சட்டசபை துணைத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது ஐந்தாண்டு பதவிக்காலத்தில் தேவதாசி முறை ஒழிப்பு, இருதார தடைச்சட்டம், பெண்களுக்கான சொத்துரிமை வழங்கும் சட்டம், பால்ய விவாக தடைச்சட்டம் போன்றவை கொண்டுவர பாடுபட்டார்.

அனாதைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்காக சென்னை அடையாறில் அவ்வை இல்லத்தை தொடங்கினார். தென்னிந்தியாவில் முதல் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைத்த பெருமை இவரையே சாரும். 1956ல் மத்திய அரசு இவருக்கு பத்மபூஷண் விருது வழங்கி கவுரவித்தது. 1968ம் ஆண்டு தனது 81வது வயதில் காலமானார்.

பாரதத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்தநாள் இன்று

# இம்ரான் தாலிபான் கான்



விஜயபாரதம்

பாகிஸ்தானில் சில நாட்களுக்கு முன் ஒளிபரப்பப்பட்ட பி.பி.எஸ் நியூஸ் ஹவர் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ஆப்கனில் தலிபான்களுடன் இணைந்து போராட 10 ஆயிரம் பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் அனுப்பப்பட்டது குறித்த கேள்விக்கு, அவர்கள் சாதாரண பொதுமக்கள். அவர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்புகின்றனர். அவர்களை பாகிஸ்தான் தடுக்காது. ஆப்கானிஸ்தானில் ஆரம்பத்தில் ராணுவத் தீர்வைக் கான புறப்பட்ட அமெரிக்காதான் ஆப்கனில் குழப்பத்தை விளைவித்தது என கூறினார். மேலும், ஆப்கன் அரசிற்கு எதிரான போராட்டத்தில் தலிபான்களுக்கு ராணுவ ரீதியாகவும், நிதி ரீதியாகவும், உளவுத்துறை உள்ளீடுகளுடனும் உதவி செய்வதாக பாகிஸ்தான் மீது நீண்டகாலமாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. ஆனால், இம்ரான்கான் உட்பட அனைத்து பாகிஸ்தான் தலைவர்களும் அதனை மறுத்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

93613 99006